உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 29.06.2026 • மலர் 04 • இதழ்: 180 • திங்கட்கிழமை • Edition : Nagercoil • 29.06.2026 • Vol : 04 • Issue : 180 • Page : 4 • Rs. 5/-

## திமுகவில் இணைந்த
# மாற்றுக்கட்சியினர் 5 ஆயிரம் பேர்

சென்னை, ஜூன் 29

அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் பெஞ்சமின் அக்கட்சியிலிருந்து விலகினார் கட்சியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக விலகி தி.மு.க. தலைவரும் முன்னாள் முதல்அமைச்சருமான மு.க. ஸ்டாலின் முன்னிலையில் பெஞ்சமின் தி.மு.கவில் இணைந்தார். தனது ஆதரவாளர்கள் மற்றும் மாற்றுக் கட்சியை சேர்ந்த தொண்டர்களை தி.மு.க.வில் இணைக்கும் விழா மாலை வானகரம் ஸ்ரீவாரி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதிஸ்டாலின்ஆகியோர் முன்னிலையில் முன்னாள் அமைச்சர் பா. பென்ஜமின் தலைமையில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்சித் தொண்டர்கள் இணைந்தனர். இந்த இணைப்பு விழாவிற்கான ஏற்பாடுகளை பென்ஜமின் செய்துள்ளார். தி.மு.க. முன்



னாள்அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், மாவட்டச் செயலாளர்கள் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அ.தி.மு.கவில் அமைச்சராகவும் மாவட்டச் செயலாளராகவும், அமைப்பு செயலாளராகவும் செயலாற்றி வந்த பென்ஜமின் தி.மு.கவில் இணைந்து கட்சிப்பணிகளைசெய்ய உள்ள நிலையில் அவருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட உள்ளது.

இணைப்பு விழாவில் பங்கேற்க வந்த தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின். உதயநிதி ஸ்டாலின் ஆகியோரை கோயம்பேடு பகுதியில் இருந்து வானகரம் வரை வரவேற்று அழைத்துச் சென்றார். தி.மு.க. கொடி தோரணங்கள் சாலை முழுவதும் கட்டப்பட்டுள்ளன. விழா நடைபெற்ற மண்டபத்தை சுற்றியும் வழி நெடுகவும் வாழை தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன.

இந்த விழாவில் முன்னாள் அமைச்சர் பென்ஜமின் நன்றி கூறினார்.

## லஞ்ச ஒழிப்புத்துறை இன்ஸ்பெக்டர் விமலாவை சஸ்பெண்ட் செய்த உத்தரவுக்கு சென்னை ஐகோர்ட்டு இடைக்கால தடை

சென்னை, ஜூன் 29



சென்னை விபச்சாரத் தடுப்புப் பிரிவு ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் ராஜலட்சுமி என்பவருக்கு எதிராக எழுந்த லஞ்ச ஒழிப்பு புகாரை விசாரித்து, ஆய்வாளர் விமலா அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

இந்த லஞ்ச ஒழிப்பு அறிக்கைக்கு ஒப்புதல் அளித்த லஞ்ச ஒழிப்புத்துறை , கடந்த ஜனவரி 6 ஆம் தேதி அன்று ஒரு குறிப்பாணையை வெளியிட்டது. அதில், ஆய்வாளர் ராஜலட்சுமிக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை (FIR) தயார் செய்யுமாறு லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வாளர் விமலாவுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

லஞ்ச ஒழிப்புத்துறையின் அறிவுறுத்தலின் பேரிலேயே மனுதாரர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். முதல் தகவல் அறிக்கையைத் தயார் செய்து, லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்புத்துறை இயக்குநரின் ஒப்புதலுக்கு மனுதாரர் அனுப்பியுள்ளார். கடந்த பிப்ரவரி 12 ஆம் தேதி அன்று, லஞ்ச ஒழிப்புத்துறை எஸ்.பி இந்த அறிக்கையை ஆய்வு செய்து, சில திருத்தங்களை மேற்கொண்ட பின்னரே முறைப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், வழக்கு பதிவு செய்த காரணத்திற்காக மனுதாரரான விமலாவைசஸ்பெண்ட் செய்து கடந்த ஜூன் 17 ஆம் தேதி அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு, இன்ஸ்பெக்டர் விமலா மீதான இந்த சஸ்பெண்ட் உத்தரவு முற்றிலும் உள்நோக்கம் கொண்டது என்பது முதற்கட்டமாகத் தெரிகிறது.

ஜூலை 9ம் தேதிக்குள் இதுகுறித்து லஞ்ச ஒழிப்புத்துறை பதிலளிக்க வேண்டும்.

மேலும், இந்த இடைநீக்க உத்தரவிற்கு வரும் ஜூலை 9 வரை இடைக் காலத் தடை விதித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. இவ்விவகாரம் தொடர்பாகத் தரப்பு பதிலளிப்பதற்காக வழக்கின் அடுத்த விசாரணையை வரும் ஜூலை 9 ஆம் தேதிக்கு கோர்ட்டு ஒத்திவைத்துள்ளது

## தஞ்சாவூரில் தமிழக சட்டசபை தீர்மான நகலை எரித்து காவிரி உரிமை மீட்பு குழுவினர் போராட்டம்




தஞ்சாவூர் ஜூன் 29

மேகதாதுவில் அணை கட்டுவது குறித்து புதிய தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்று தமிழக அரசு சட்ட சபை தீர்மான நகலை எரித்து தஞ்சாவூரில் காவேரி உரிமை மீட்பு குழுவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்

கர்நாடக அரசு மிகுதியாக அணை கட்டுவது குறித்து முடிவு செய்ய மத்திய அரசு புதிய தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்று தமிழக சட்டசபை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இந்தத் தீர்மானத்தை ரத்து செய் ய வேண்டும். இந்த தீர்மானம் காவிரியை காவு கொடுக்கும் தீர்மா னம் எனக்கூறி காவிரி உரிமை மீட்பு குழுவினர் தீர்மான நகலை எரிப்பு போராட்டம் நடத்தப் போவ தாக அறிவித்து இருந்தனர். அதன் படி தஞ்சாவூர் பழைய பஸ் நிலை யம் அருகே காவிரி உரிமை மீட்பு குழு சார்பில் தமிழக சட்டசபை தீர்மான நகல் எரிப்பு போராட்டம் நடந்தது. இந்த போராட்டத்திற்கு காவிரி உரிமை மீட்பு குழு ஒருங் கிணைப்பாளர் மணியரசன் தலைமை தாங்கினார்

பொருளாளர் மணிமொழியன் தமிழ் தேசிய பேரியக்கப் பொதுச் செயலாளர் வெங்கட்ராமன்,நாம் தமிழர் கட்சி மாநில ஒருங்கிணைப் பாளர் ஹுமாயூன் கபீர் ,மணி, செந்தில், தமிழக விவசாயிகள் சங்க மண்டல தலைவர் ஜெகதீசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் பின்னர் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மேகதாதுவில் அணை கட்டினால் மிகையான வெள்ள நீர் கூட காவிரி தமிழகத் திற்கு வரவிடாமல் தடுத்து விடுவார்கள். எனவே தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டும் என கூறி கோஷங்கள் எழுப்பினர்

பின்னர் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தீர்மானத்தின் நகலை தீவைத்து எரித்தனர் அப் போது அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் தண்ணீரை ஊற்றி தீயை அணைத்தனர் போராட்டத்தில் தமிழர்தேசியபேரியக்கமாவட்டசெயலாளர்வைகரை, நாம்தமிழர்கட்சி மாநில பொருளாளர் பாரதி செல்வன், இந்திய ஜனநாயக கட்சியின் மாநில கொள்கை பரப்பு செயலா ளர் சிமியோன் சேவியர் ராஜ் காவிரி விவசாயிகள்பாதுகாப்பு சங்க செயலாளர் சுந்தர் விமலநாதன் மற்றும் காவிரி உரிமை மீட்பு குழு நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

## தமிழக அரசின் டெல்லி பிரதிநிதி நியமன விவகாரம்: அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம்

சென்னை, ஜூன் 29



அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

போலியோ இல்லாத உலகத்தை உருவாக்குவோம்" என்ற குறிக்கோளின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு சார்பாக மாநிலம் முழுவதும் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது. வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ராஜமங்கலம்அரசுஆரம்பசுகாதாரநிலையம், அயனாவரம் மகப்பேறு மருத்துவமனையில் இன்று நடைபெற்ற சிறப்பு போலியோ சொட்டு மருந்து முகாமில் பங்கேற்றேன். பிறந்த குழந்தைகள் தொடங்கி ஐந்து வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இதன்மூலம் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. இதுவரைதங்கள்குழந்தைகளுக்கு சொட்டு மருந்து பெறாத பெற்றோர்கள், உங்கள் அருகில் உள்ள முகாமுக்கு சென்று தங்கள் குழந்தைகளுக்கான சொட்டு மருந்தினை கொடுத்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## நந்தா கல்வி நிறுவனங்களின் கீழ் இயங்கி வரும் இந்திய மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றான நந்தா சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதலாவது பட்டமளிப்பு விழா




ஈரோடு, ஜூன் 27

நந்தா கல்வி நிறுவனங்களின் கீழ் இயங்கி வரும் இந்திய மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றான நந்தா சித்த மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதலாவது பட்டமளிப்பு விழா நடைப்பெற்றது. இவ்விழாவில் தேசிய ஆணையத்தின் யுனானி, சித்தா மற்றும் சோவாரிக்பா பிரிவின் முன்னாள் தலைவர்

மருத்துவர் கே. ஜெகநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். தரவரிசையில் இடம் பெற்ற 3 மாணவர்கள் உட்பட 50 மாணவ மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கி பேருரையாற்றினார்.

தலைவர் வி.சண்முகன் தலைமை வகித்தார். கல்லூரியின் முதல்வர் மருத்துவர் இவ்விழாவிற்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் எம்.மேனகா வரவேற்றார்.

நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி. முதன்மை நிதி அலுவலர் ஏ. சிவப்பிரகாசம் மற்றும் கல்லூரியின் நிர்வாக அலுவலர் முனைவர் ஜீ.தர்மராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தை உலுக்கிய ரிதன்யா மரணம்; முதலாமாண்டு நினைவஞ்சலி செலுத்திய குடும்பத்தினர்




திருப்பூர், ஜூன் 29

அவினாசி கைகாட்டிபுதூரை சேர்ந்தவர் அண்ணாதுரை. இவருடைய மகள் ரிதன்யா (வயது 27). இவருக்கும், அதே பகுதியை சேர்ந்த ஈஸ்வரமூர்த்தியின் மகன் கவின்குமாருக்கும் (27) கடந்த 2025ம் ஆண்டு ஏப்ரல் 11ந் தேதி திருமணம் நடைபெற்றது. இந்த நிலையில் கடந்த ஆண்டு ஜூன் 28 ந்தேதி காருக்குள் விஷம் குடித்து ரிதன்யா தற்கொலை செய்து கொண்டார். தற்கொலைக்கு முன்பு ரிதன்யா தனது தந்தைக்கு வாட்ஸ்அப்பில் அழுதபடி ஆடியோ அனுப்பி இருந்தார். அதில் தனது சாவுக்கு தனது கணவன், மாமனார், மாமியார் காரணம் என உருக்கமாக பேசிய ஆடியோ வெளியாகி தமிழகத்தையே உலுக்கியது. இதைத்தொடர்ந்து சேவூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து கவின்குமார், ஈஸ்வரமூர்த்தி, சித்ராதேவியை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், ரிதன்யா உயிரிழந்து இன்றோடு ஓராண்டு கடந்துள்ளது. அவரது முதலாமாண்டு நினைவு தினத்தையொட்டி, ரிதன்யாவின் குடும்பத்தினர் அவரது உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். பின்னர் ரிதன்யாவின் தந்தை பேசுகையில், தனது மகளுக்கு நேர்ந்த கதி வேறு எந்த பெண்ணுக்கும் வரக்கூடாது என்றும், குற்றவாளிகளுக்கு கடுமையான ஆயுள்தண்டனைகிடைக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம். பட்டதாரி. தமிழில் உரையாடுதல். தமிழில் பிழையின்றி எழுதுதல். தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## 'திமுகவை தீயசக்தி என்று சொன்னவர் எம்.ஜி.ஆர்' மு.க. ஸ்டாலின் பேச்சுக்கு தவெக பதிலடி

, தமிழக வெற்றிக் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவு வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

எம்.ஜி.ஆர். தி.மு.க.வில் இருந்தார் திமுகவில் இருந்தார் என்று கொளத்தூர் தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ. ஸ்டாலின் அவர்கள் பெருமை பொங்க பேசினார். தி.மு.க.வால்தான் முதன்முதலில் எம்.எல்.ஏ. ஆனார். அதுதான் வரலாறு என்றெல்லாம் சொன்னவர், பிறகுதான் தனிக் கட்சி கண்டார் என்றும் தொடர்ந்து சொன்னார். ஆனால், தன் வாழ்நாள் எதிரியே தி.மு.க.தான் என்று கடைசிவரை வாழ்ந்தவர் எம்.ஜி.ஆர். தி.மு.க.வை ஒரு தீயசக்தி என்று அன்று சொன்னவர் எம்.ஜி.ஆர். தான் உயிரோடு இருக்கும்வரை தி.மு.க.வைக் கூப்பிலேயே உட்கார வைத்திருந்தார் எம்.ஜி.ஆர். என் நண்பர் எம்.ஜி.ஆர் அமெரிக்காவில் இருந்து வந்ததும் ஆட்சியைத் திருப்பித் தந்துவிடுகிறேன். அதுவரை என்னிடம் ஆட்சியைக் கொடுங்கள் என்று தி.மு.க.வைக் கெஞ்ச வைத்தார் எம்.ஜி.ஆர். இதுவும் வரலாறுதான் என்ற உண்மையைச் சொல்வாரா ஸ்டாலின் சார்?. சட்டம் ஒழுங்கு டிஜிபியை நியமிக்காமல் தமிழகத்தின் சட்டம் ஒழுங்கையே சந்தி சிரிக்க வைத்தவரும் இன்றைய நிலைக்கு ஆழமாய் விதை போட்டவரும் ஸ்டாலின் சார்தான். ஆனால், எல்லாவற்றையும் மறந்துவிட்டு, இன்று ஏதோ தன்னால் தமிழகம் பாழ்படவே இல்லை என்பதுபோலப் பேசிதன்நகைச்சுவைதிறனை காட்டுகிறார்.

## குமரியில்

# போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாம் அமைச்சர் ராஜேஷ் குமார் துவக்கி வைத்தார்



நாகர்கோவில், ஜூன்.29

கன்னியாகுமரி மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருத்துத்துறை சார்பில் குமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதத்தடுப்பு சிறப்பு சொட்டு மருந்து வழங்கும் முகாம் நேற்று 28. ம் தேதி நடைபெற்றது.

இம்முகாமினைசுற்றுலாத்துறைஅமைச்சர் செ.ராஜேஷ் குமார் துவக்கி வைத்தார். தொடர்ந்து அவர் கூறியதாவது:

1997ஆம் ஆண்டிற்கு பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் போலியோவால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் கண்டறியப்படவில்லை.

இந்த ஆண்டு இச்சிறப்பு முகாம் ஒரே கட்டமாக நடைபெற்று வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இம்முகாமில் 1 லட்சத்து 37 ஆயிரத்து 847 குழந்தைகள் பயன்பெற உள்ளனர். இம்முகாம்கள் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அனைத்து அரசு மருத்துவமனைகள், நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், நகராட்சி மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் என 1236 முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 5048 பணியாளர்கள் (பொது சுகாதாரம், ஊட்டச்சத்து, சத்துணவு, நகராட்சி) பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

உரிய பேருந்து வசதி இல்லாத மலைப் பகுதிகளில் 17 நடமாடும் குழுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தோட்டமலை மற்றும் தச்சமலை பகுதிகளுக்கு படகுகளில் சென்று சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. முகாம் ஆய்வுப் பணிகளுக்கு 146 மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 5 வயதுக்குட்பட்டஅனைத்துகுழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து கொடுத்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். என கூறினார்.

நடைபெற்ற முகாமில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆர்.ஐஸ்வர்யா, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.லியோ டேவிட், மாவட்ட பொது சுகாதார அலுவலர் மரு.நமச்சிவாயம், மருத்துவர்கள், செவிலியர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், குழந்தைகளின் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# கீழவைப்பார் மற்றும் சிப்பிகுளம் கடற்கரை பகுதியில் மீன்வளத்துறை அமைச்சர் ஆய்வு



விளாத்திகுளம் ஜூன் 29.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள கீழவைப்பார் மற்றும் சிப்பிகுளம் மீனவ கிராமங்களில் திடீரென தமிழக மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது அப்பகுதியில் உள்ள மீனவர்கள் மழை நேரங்களிலும், அதிகமாக வீசும் காற்றின் காரணமாக, கடற்கரையில் கட்டப்பட்டுள்ள நாட்டுப் படகுகள் ஒன்றோடு ஒன்று மோதி உடைந்து சேதம் அடைந்துவருகின்றது,முகத்துவாரப்பகுதி முறையாக தூர் வாராததால் கடல் நீர் கிராமத்துக்குள் உள்புகும் அபாயம் ஏற்பட்டு வருகிறது.

ஏற்கனவே கடலில் போடப்பட்டுள்ள தூண்டில் வளைவு போதுமானதாக இல்லாத காரணத்தினால் தான் கடற்கரைப் பகுதியில் அதிக காற்று வீசி படகுகள் சேதம் அடைந்து வருவதாகவும், கீழவைப்பாரில் புதிதாக போடப்பட்டுள்ள தூண்டில் வளைவை 100 மீட்டர் அதிகரித்தும், சிப்பிகுளத்தில் போடப்பட்டுள்ள தூண்டில் வளைவை 200 மீட்டர் தூரத்திற்கு அதிகரிக்க வேண்டும் என்று அமைச்சர் ஸ்ரீநாத்திடம் மீனவர்கள் கோரிக்கை வைத்தனர்.

அதேபோல் குளத்தூரில் இருந்து சிப்பிகுளம் வரும் சாலை மிகவும் மோசமாக குறுகிய சாலையாக இருப்பதால் அடிக்கடி விபத்து ஏற்படுவதாகவும், சாலையை அகலப்படுத்தி சீரமைத்து தர வேண்டும் என்றும்,படித்த மீனவ கிராம இளைஞர்களுக்கு உரிய வேலை வசதி செய்து தர வேண்டும் என்று அடுக்கடுக்கான கோரிக்கைகளை முன் வைத்தனர்,அதற்கு அமைச்சர் ஸ்ரீநாத் உங்களின் அனைவரின் கோரிக்கைகளையும் மனுவாக எழுதித் தருமாறு கூறினார்.

இந்நிகழ்வில் தூத்துக்குடி மாவட்ட மீன்வளத்துறை உதவி இயக்குனர் புஷ்ரா ஷப்னம்,தூத்துக்குடி வடகிழக்கு மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி சார்பாக மாவட்டச்செயலாளர் மகேஸ்வரன், மாவட்டத் துணைச்செயலாளர் எபநேசர்,மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் திவான், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ரவீனா, செண்பகராஜ்,மாவட்ட தகவல் தொடர்பு அணி சண்முகராஜ்,விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் தங்கமாரியப்பன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் சின்னசாமி,கீழவைப்பார் கிளை நிர்வாகிகள் தியாகு, பூபாலன் மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.



## ஆழப்பட்டி கிராமத்தில்

# போலியோ சொட்டு மருந்து முகாம்


கிருஷ்ணகிரி, ஜூன் 29

கிருஷ்ணகிரி மாவட்டம் ஆழப்பட்டி கிராமத்தில் தமிழக வெற்றிக் கழகம் மத்திய மாவட்டம் தென் மேற்கு ஒன்றிய செயலாளர் சந்திரசேகர் தலைமையில் போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் பொருளாளர் ராம்குமார் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் சிவசக்தி, அருணகிரி, சின்ராஸ், சுரேஷ், சந்தோஷ், கோபி மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருச்சி அருகே

# பேருந்து மீது கார் மோதி விபத்து



திருச்சி, ஜூன் 29

திருச்சி அருகே பெட்டவாய்த்தலை பகுதியில் சாலையில் சென்று கொண்டிருந்த கார் மீது பின்னால் வந்த பால் லாரி மோதியதில், கார் முன்னால் சென்ற பேருந்து மீது மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் காரின் முன் பக்கம் அப்பளம் போல் நொறுங்கியது.

காரில் பயணித்த இரண்டு பேர் படுகாயம் அடைந்தனர். இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதி ப்பு ஏற்பட்டது.

## மாநகர் மாவட்ட செயலாளருக்கு வாழ்த்து

# அதிமுகவில் புதிய மாவட்ட செயலாளர்கள் நியமனம்



திருப்பூர், ஜூன். 29

அதிமுக பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அமைப்பு ரீதியாக பல்வேறு மாவட்டங்களை பிரித்து புதியதாக மாவட்ட செயலாளர்களை நியமித்துள்ளார். மாநகராட்சி 25வது வார்டு மாமன்றஉறுப்பினர் சிறு பூலுவபட்டி பகுதிச் செயலாளர் தங்கராஜ் தலைமையில் கழக நிர்வாகிகள். சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.. அதன்படி திருப்பூர்மாவட்டத்திற்கும் புதிய மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். திருப்பூர் வடக்கு மற்றும் தெற்கு தொகுதிக்கு திருப்பூர் மாநகர் மாவட்ட அதிமுக செயலாளராக திருப்பூர் மாவட்ட ஊராட்சி குழு முன்னாள் வார்டு உறுப்பினர் வேல் குமார் சுவாமிநாதன், திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளராக காங்கேயம், தாராபுரம், மடத்துக்குளம் ஆகிய தொகுதிகளுக்கு மூலனூர் வடக்கு ஒன்றியத்தை சேர்ந்த செல்வகுமார், திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட செயலாளராக பல்லடம், உடுமலை ஆகிய தொகுதிகளுக்கு அமைப்புச் செயலாளர் சிவசாமி எம்பி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.



# பத்மநாபபுரம் அரசு தலைமை மருத்துமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் ஆய்வு

நாகர்கோவில், ஜூன்.29

தக்கலையில் உள்ள பத்மநாபபுரம் அரசு தலைமைய மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளிடம் மருத்துவமனையில் வழங்கப்படும் சிசிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார். பின்னர் அவர் கூறியதாவது:

தமிழ்நாடு அரசு சார்பில் குமரி மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆரம்ப சுகாதார மையங்கள், அரசு மருத்துவமனைகள், அரசு தலைமை மருத்துவமனைகள், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனை உள்ளிட்ட மருத்துவமனைகள் மூலமாக நோயாளிகளுக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார்கள். குறிப்பாக இருதய அறுவை சிகிச்சை, இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், புற்று நோய், கர்ப்பிணி பெண்களுக்கான மருத்துவ வசதிகள் உள்ளிட்டவை சிறந்த முறையில் வழங்கப்பட்டு வ ரு கி ற து .

அதனடிப்படையில் பத்மநாபபுரம் அரசு தலைமை மருத்துவமனை உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளிடம் மருத்துவர்கள் சிறந்த முறையில் மருத்துவ சிகிச்சை அளிக்கிறார்களா? உள்ளிட்டவைகள் குறித்து கேட்டறியப்பட்டது. மேலும் மருத்துவமனைவளாகத்தினைமுழுசுகாதாரத்துடன் பாதுகாப்பதோடு, மருத்துவமனைக்கு வரும் உள் நோயாளிகள் மற்றும் புற நோயாளிகளிடம் கனிவாக நடந்து கொள்வதோடு, சிறந்த முறையில் சிகிச்சை அளித்திட மருத்துவமனை கண்காணிப்பாளர், மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிடோர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. என கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் உதவி ஆட்சியர் (பயிற்சி) மோனிகா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.நமச்சிவாயம், பத்மநாபபுரம் அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.மில்லிங்டோனியா, மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# விவசாயம், சொந்த வீட்டு உபயோகம், மண்பாண்டம் தயாரிக்க வண்டல் மண் மற்றும் களிமண் எடுக்க அனுமதி

சேலம் மாவட்டத்தில் உள்ள ஏரிகளில் இருந்து விவசாயம், சொந்த வீட்டு உபயோகம், மண்பாண்டம் தயாரிக்க வண்டல் மண் மற்றும் களிமண் எடுக்க சேலம் மாவட்டத்தில் உள்ள 322 நீர் நிலைகளில் இருந்து வண்டல் மண்/ களிமண் போன்றவற்றை வெட்டி எடுத்து பயன்படுத்திக் கொள்ள தகுதி வாய்ந்த நபர்களை கண்டறிந்து சேலம் மாவட்ட அரசிதழ் நிர்வாகம் சிறப்பு

வெளியீட்டின்படி பிரசுரம் செய்யப்பட்டு அனுமதி வழங்கப்படும். இதற்கு ஏதுவாக மேற்கண்ட ஏரிகளின் விவரங்களை இ சேவை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அனுமதி கோரி வரப்பெறும் தகுதி வாய்ந்த விண்ணப்பங்கள் மீதும், நிலுவையில் உள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பங்கள் மீதும் அரசின் நிலையான இயக்க செய்முறையை பின்பற்றி எவ்வித சுணக்கம் இல்லாமலும், காலதாமதம் இல்லாமலும் விரைந்து அனுமதி வழங்க கூடிய வகையில் அனைத்து வருவாய் வட்டாட்சியர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

ஏரிகளில் தண்ணீர் இல்லாத இடங்களில் நீர்நிலை கட்டுப்பாட்டு அலுவலரால் அனுமதிக்கப்பட்ட இடத்தில் மட்டும் மண் வெட்டி எடுக்க வேண்டும். அனுமதி தாரர் அனுமதிக்கப்பட்ட பகுதியில் வெட்டி எடுத்து வெளியில் அனுப்பும் கனிமத்திற்கு உரிய கணக்குகளை நீர் நிலை கட்டுப்பாட்டு ஊரக வளர்ச்சித் துறை/ நீர்வளத்துறை அலுவலர்களால் உரிய பதிவேட்டில் விவரங்கள் எழுதி தினசரி விவரப்பட்டியலைதயாரித்துஅதனைமாவட்ட ஆட்சியருக்கு தினமும் சமர்ப்பிக்க வேண்டும். பாசன மடையின் அடிமட்டத்திற்கு கீழ் மண் எடுக்க அனுமதி இல்லை.

மேலும் இந்த நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் வண்டல் மண் மற்றும் களிமண் ஆகிய இரு கனிமங்களை வெட்டி எடுக்க வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படுவதோடு அபராத நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். ஏரிகளின் அணுகு சாலை மற்றும் கட்டமைப்புகளுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால் அவற்றுக்கான இழப்பீடு அனுமதி பெற்ற அனுமதிதாரிடம் இருந்து வசூல் செய்யப்படும். மேலும் ஏரிகளுக்கு ஏற்பட்ட சேதத்தை சீரமைப்பதற்கு அரசினால் ஏதேனும் தொகை செலவிடப்பட்டிருந்தால் அந்த தொகையும் அனுமதிதாரர்களிடம் இருந்து வசூலிக்கப்படும். எனவே விவசாயபயன்பாடு,மண்பாண்டதொழில் செய்வோர் மற்றும் சொந்த வீட்டு உபயோகம் ஆகியவற்றிற்கு வண்டல் மண் /களி மண் போன்றவற்றை இலவசமாக வெட்டி எடுத்து செல்ல விரும்பும் பயனாளர்கள் அருகில் உள்ள இ சேவை மையங்களில் தேவையான ஆவணங்களுடன் இணைய தள வழியில் விண்ணப்பம் செய்து உரிய அனுமதி பெற்று மேற்கண்ட நிபந்தனைகளை முறையாக பின்பற்றி திட்டத்தினை சிறப்புற பயன்படுத்தி தங்களது தேவைகளை மேம்படுத்திக் கொள்ள மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறினார்.



# சில்வார்பட்டியில் போலியோ சொட்டு மருந்து முகாம்

## தவெக தொழிற்சங்க மண்டல பொறுப்பாளர் பங்கேற்று குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கல்

பெரியகுளம் ஜூன்.29

தமிழக முழுவதும் நேற்று போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது. முகாமினை சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர்தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து தேனி வடக்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ், பெரியகுளம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் சபரி ஐங்கரன் எம்எல்ஏ, ஒன்றிய நிர்வாகிகள் சிவநாதன், சக்தி, முருகன் ஆகியோர் அறிவுறுத்தலின் படி பெரியகுளம் அருகே உள்ள சில்வார்பட்டி ஆரம்ப துணை சுகாதார நிலையத்தில் பச்சிளம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் தமிழக வெற்றிக் கழக தொழிற்சங்க மண்டல பொறுப்பாளர் குமரேசன் கலந்து கொண்டு குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கினார். உடன் சில்வார்பட்டி கிளை நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




# தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி நியமனத்தை காங்கிரஸ் பெரிது படுத்தவில்லை: அமைச்சர் ராஜேஷ்குமார் பேட்டி

நாகர்கோவில், ஜூன்.29

தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார் நேற்று நாகர்கோவில் நிருபர்களிடம் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் கேன்சர் பாதிப்பு அதிகமாக உள்ளது. ஏற்கனவே இங்குகேன்சர்ஆராய்ச்சிமையம்தொடங்க வேண்டும் என பல ஆண்டுகளாக கோரிக்கை இருந்து வருகிறது. தற்போது காங்கிரஸ் பங்கேற்கும் கூட்டணி அரசு தமிழகத்தில் அமைந்துள்ளது. இந்த கோரிக்கையை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும்.

குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் கேன்சருக்கான சிகிச்சை மையம் கட்டப்பட்டு, பணிகள் அனைத்தும் ஏற்கனவே முடிவடைந்துள்ளன. ஒன்றியஅரசின்கதிர்இயக்கத்துறைலைசென்ஸ் பெற வேண்டும். இதற்கான பணிகள் நடந்து வருகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் சுகாதாரத் துறை அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு இந்த பிரச்சனையை கொண்டு சென்று, விரைவில் கேன்சருக்கான ரேடியோ தெரபி சிகிச்சை மையத்தை திறக்க நடவடிக்கை எடுக்கப்படும். கேன்சர் பாதிக்கப்பட்ட நோயாளிகள் சிகிச்சை மற்றும் கேன்சர் தொடர்பான விழிப்புணர்வு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குமரி மாவட்டத்தில் மக்கள் நல்வாழ்வு துறையுடன் இணைந்து கேன்சர் தடுப்புக்கான நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அவர் காங்கிரஸ் கட்சியில் அகில இந்திய பொறுப்புகள் உட்பட பல்வேறு பொறுப்புகளில் இருந்தவர். கட்சியை பலப்படுத்தும் வகையில் அவர் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, வட்டாரத் தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை சந்தித்து கட்சியை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்வார்.

தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதிநியமனத்தில்எந்தநிலைப்பாட்டையும் நாங்கள் எடுக்கவில்லை. புதிய அரசு பொறுப்பேற்று இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்று குறைந்த நாட்கள்தான் ஆகிறது. மக்கள் நல பணிகளில் இந்த அரசின் செயல்பாடுகளை நாங்கள் உற்று நோக்கி வருகிறோம். எதற்கெடுத்தாலும் குறை சொல்ல நாங்கள் விரும்பவில்லை. மக்கள் நல திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த அரசு செயல்பட வேண்டும். தொலைநோக்கு பார்வையுடன் தான் எதையும் பார்க்க வேண்டும்.

டெல்லி பிரதிநிதி நியமனம் சரியா ? தவறா? என்பதை ஆராய்ந்து பார்க்க கூடாது. இதை ஆதரிப்பதாகவும் எடுத்துக் கொள்ள வேண்டாம். இதை நாங்கள் பெரிது படுத்த விரும்பவில்லை. இவ்வாறு அமைச்சர் ராஜேஷ்குமார் கூறினார். இந்த பேட்டியின் போது மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் உட்பட பலர் உடன் இருந்தனர்.



# விளாத்திகுளம் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் ஆனி மாத சனி மகா பிரதோஷம்

விளாத்திகுளம் ஜூன் 29.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் அமைந்துள்ள 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் ஆனி மாத சனி மகாபிரதோஷத்தை முன்னிட்டு நந்திகேஸ்வரர் மற்றும் மீனாட்சிசுந்தரேஸ்வரருக்கு பால்,தயிர்,மஞ்சள்,இளநீர், பன்னீர்,சந்தனம்,திருநீர் உள்ளிட்ட பல்வேறு வகையான அபிஷேகங்கள் செய்யப்பட்டது, அதனைத்தொடர்ந்து வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட நந்தீஸ்வரருக்கு விரலிமஞ்சளால்மங்களகாப்புஅணிவிக்கப்பட்டது. பிரதோஷரிஷபவாகனத்தில்எழுந்தருளிசந்திரசேகரர் உமா மகேஸ்வரி பக்தர்களுக்கு அருள் பாலித்தார்,அதனைத்தொடர்ந்து சிவ நாமத்துடன் நந்திகேஸ்வரர் மற்றும் மீனாட்சிசுந்தரேஸ்வரருக்கு பஞ்சமுக தீபாதாரனை காண்பிக்கப்பட்டது. இன்றுமகாசனிபிரதோஷம்என்பதால்விளாத்திகுளம் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# தேசிய போலியோ சிறப்பு முகாம்



பல்லடம்ஜூன்:29

அறிவெளி நகர் திருப்பூர் மேற்கு மாவட்ட செயலாளர் ஜி .கே. சங்கர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் கே. ராம்குமார் ஆலோசனையின் படி பல்லடம்வடக்கு ஒன்றியத்தின் சார்பாக போலியோ சொட்டு மருந்து பொதுமக்களுக்கு வழங்கும் நிகழ்வில் அப்பகுதி கிளைகளில் ஆறுமுத்தாம் பாளையம், அறிவொளி நகர், தெற்குபாளையம், மகாலட்சுமி நகர், மற்றும் சேகாம்பாளையம், ஆகிய கிளைகளில் ஒன்றிய செயலாளர் A. அபூபக்கர் சித்திக்த லைமையில் இணைச் செயலாளர் R பிரபு ( எ) கார்த்திக் துணைச் செயலாளர் Jஅஷ்ரப் ஒன்றிய செயற்குழு உறுப்பினர் ரம்யா, சாகிராபானு, மற்றும் மகளிர் அணி லாயிலா, ரேஷ்மா, ஆகியோர் கலந்து கொண்டனர். மற்றும் தூய்மை பணியாளருக்கு கைப்பேசிகள் வழங்கப்பட்டது. த.வெ.க. நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## குமரி வனத்துறையை கண்டித்து

# களியலில் பாஜ உண்ணாவிரத போராட்டம்: 75 பேர் கைது



மார்த்தாண்டம், ஜூன்.29

மேல்புறம் வடக்கு ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி சார்பில் களியல் சந்திப்பில் உண்ணாவிரத போராட்டம் நடந்தது.

குமரி மாவட்ட வன பகுதிகளான ஆறுகாணி, பத்துகாணி வட்டப்பாறை, பேணு, ஒரு நூறாம் வயல், மோதிர மலை, கோதையாறு, கோலிஞ்சி மடம் ஆகிய மலையோர பகுதிகளில் வசிக்கிற மலைவாழ் மக்களை வன விலங்குகள்தாக்குவது, காட்டுயானைஅட்டகாசம் போன்றவை தொடர் நடவடியாக வந்து கொண்டிருக்கிறது. மக்களை பாதுகாப்பதற்கோ வனவிலங்குகளை அகற்றுவதற்கோ வனத்துறை எந்தவித நடவடிக்கையும் வனதுறை எடுக்கவில்லை என புகார் எழுந்துள்ளது.

வன விலங்குகளில் இருந்து மக்களை காப்பாற்றவும் பிரச்சனைக்குரிய யானையை பிடித்து சரணாலயத்தில் கொண்டு செல்ல கேட்டும், வன எல்லை பகுதியில் மின்சார வேலி அமைக்கவும், அகழிகள்அமைக்கநடவடிக்கை எடுக்க கேட்டும் பாரதிய ஜனதா கட்சி சார்பில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டம் நேற்று களியல் சந்திப்பில் நடைபெற்றது. மேல்புறம் ஒன்றிய தலைவர் ஹரீஸ் குமார் தலைமையில் நடைபெற்றது. இந்த உண்ணாவிரத போராட்டத்தை மேற்கு மாவட்ட பாஜக தலைவர் ஆர் டி சுரேஷ் துவக்கி வைத்தார். அப்போது உண்ணாவிரத போராட்டத்திற்கு காவல்துறை அனுமதி மறுத்ததாக கூறி போராட்டத்தில் ஈடுபட்ட 75 க்கும் மேற்பட்ட பாஜகவினரை போலீசார் கைது செய்து மண்டபத்தில் வைத்தனர். மண்டபத்தில் பாஜவிகவினர்உண்ணாவிரத போராட்டத்தை தொடர்ந்து நடத்தினனர்.



## காரமடை நகர திமுக சார்பில்

# 4வது வார்டு பகுதியில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பிறந்தநாள் விழா

கோவை ஜூன்:29

கோவை வடக்கு மாவட்டம்,காரமடை நகராட்சி 4வது வார்டு இம்மானுவேல் நகர் பகுதியில் மறைந்த முன்னாள் முதல்வரும் திமுக தலைவருமான டாக்டர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு நகர திமுக சார்பில் நகர கழக செயலாளர் கே.ஜி.குரு பிரசாத் தலைமையில் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவிதது மரியாதை செலுத்தி கொண்டாடப்பட்டது.இந்நிகழ்வில்4வது வார்டு நிர்வாகி எஸ்.கே.செந்தில் வரவேற்றார்.

மேலும் இதில் சிறப்பு அழைப்பாளர்களாக கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி, முன்னாள் எம்.எல்.ஏ., பா.அருண்குமார்,

மேட்டுப்பாளையம் நகர செயலாளர்கள் அஷ்ரப் அலி,முனுசாமி மற்றும் காரமடை நகர மன்ற தலைவர் உஷா வெங்கடேஷ் ஆகியோர் கலந்து கொண்டு 200 பள்ளி மாணவ மாணவியருக்கு நோட்டு ுத்தகம்,பேனா,பென்சில்கள் வழங்கப்பட்டது.மேலும் அப்பதியில் உள்ளபொதுமக்கள் 500 மேற்பட்டோருக்கு அசைவ விருந்து வழங்கி சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்வில் காரமடை நகர மன்ற உறுப்பினர்கள்,மாவட்ட நகர மற்றும் வார்டு கழக நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டார்கள்.முடிவில் ரஞ்சித்குமார் நன்றி கூறினர்.

# பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம்



திருப்பூர்: ஜூன் 29

கால்நடைத்துறை அமைச்சர் செ.கமலி பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாமினை துவக்கி வைத்தார்கள்.

திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் முன்னிலையில், மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் தலைமையில், திருப்பூர் மாநகராட்சி, டி.எஸ்.கே.நகர்ப்புறஆரம்பசுகாதாரநிலையத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின்சார்பில்தீவிரபோலியோ சொட்டு மருந்து முகாமினைதுவக்கி வைத்தார்கள்.. கால்நடைத்துறை அமைச்சர் செ.கமலி தெரிவித்தாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் இன்றைய தினம் துவக்கி வைக்கப்பட்டது. இந்த போலியோ சொட்டு மருந்தானது போலியோ நோயை அறவே ஒழிப்பதற்காக வழங்கப்படுகிறது. இம்முகாமானது திருப்பூர் மாவட்டத்தில் கிராமப்புறங்களில் 972 மையங்களும், நகர்ப்புறங்களில் 214 மையங்களும் என மொத்தம் 1,186 போலியோசொட்டு மருந்து மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், பேருந்து நிலையம், ரயில் நிலையம் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடுகின்ற இடங்களில் உள்ள குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்க 23 மையங்கள் மற்றும் 26 நடமாடும் குழுக்கள் சிறப்பு மையங்களாக அமைக்கப்பட்டுள்ளன. முகாமிற்கு தேவையான போலியோ சொட்டுமருந்துகள் அனைத்து ஆரம்ப சுகதார நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு முகாமில் வழங்க தயார் நிலையில் உள்ளது.

போலியோ சொட்டு மருந்து வழங்கும் மையங்களில் பொது சுகாதாரத்துறை, அங்கன்வாடி பணியாளர்களுடன் பிற துறை பணியாளர்கள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ரோட்டரி சங்கங்கள் என 4,752 பணியாளர்கள் பணியாற்றவுள்ளனர்.

இப்பணியில் 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. அரசால் வழங்கப்படும் போலியோ சொட்டு மருந்து மிகவும் தரமானது. பாதுகாப்பானது. உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்றது. போலியோ சொட்டு மருந்து வழங்குவதன் மூலம் குழந்தைகளுக்கு எந்தவிதமான பின்விளைவுகளும் ஏற்படாது.

எனவே, அனைத்து 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு ஏற்கெனவே போலியோ சொட்டு மருந்து கொடுத்திருந்தாலும் முகாம் நாளான இன்று தவறாமல் போலியோ சொட்டு மருந்து வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் செ.கமலி தெரிவித்தார்.

இம்முகாமில், துணை மேயர் ரா.பால சுப்பிரமணியம், மாநகராட்சி 2ஆம் மண்டலத்தலைவர் கோவிந்தராஜ், மாநகர நல அலுவலர் மோகன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள், மருத்துவ பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# காணிமடத்தில் போலியோ சொட்டு மருந்து முகாம்

கன்னியாகுமரி ஜூன் 29

தமிழ்நாடு முழுவதும் 5 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெறுகிறது. அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் சத்துணவு மையங்கள். பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் குமரி மாவட்டம் அஞ்சுகிராமம் பேரூராட்சிக்கு உட்பட்ட காணிமடம் துணை சுகாதார நிலையத்தில் போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது. முகாமினைஅஞ்சுகிராமம் பேரூராட்சி கவுன்சிலர் இராஜ பாண்டியன் தொடங்கி வைத்தார். இதில் கிராம சுகாதார செவிலியர் கல்பனா தேவி உட்பட பலர் கலந்து கொண்டனர்

## தருமபுரியில்

# போலியோ சொட்டு மருந்து முகாமை துவக்கி வைத்த சட்டப்பேரவை உறுப்பினர் சௌமியா அன்புமணி



தருமபுரி ஜூன் 29

தருமபுரி நகரம் சந்தைப்பேட்டையில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தில் தேசிய போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது.

இந்த முகாமினை தருமபுரி சட்டப்பேரவை உறுப்பினர் சௌமியா அன்புமணி துவக்கி வைத்தார். பொது மக்களிடையே பேசிய அவர் இந்தியாவில் போலியோ ஒழிப்பிற்காக விருது பெற்றவர் அன்புமணி ராமதாஸ் என பெருமிதம் தெரிவித்தார்.

தருமபுரி மாவட்டத்தில் 1, 08,343 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த பணிகளுக்காக கிராமப் பகுதியில் 964 முகாம்கள், நகரப் பகுதியில் இருவது முகாம்கள் என மொத்தம் 984 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, துணை இயக்குனர் சுகாதாரப் பணிகள் ராஜேந்திரன், நகராட்சி ஆணையாளர் வசந்தி, நகர மன்ற தலைவர் லட்சுமி நாட்டான் மாது, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ். பி. வெங்கடேஸ்வரன், வட்டார மருத்துவ அலுவலர் தேவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சேலம் மாவட்டம்

# கந்தம்பட்டி அப்டேட் கார்ஸ் திறப்பு விழா அமைச்சர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்



சேலம், ஜுன் 29

சேலம் கந்தம்பட்டியில் அப்டேட் கார் ஷோரூம் திறப்பு விழா நடைபெற்றது. இதில் அப்டேட் கார் குடும்பத்தின் நிறுவனர் ஆனந்த்,செல்லதுரை, ஆகியோர் முன்னிலையில் போக்குவரத்து துறை அமைச்சர் அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி கார் ஷோரூமை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் எம்எல்ஏக்கள் லட்சுமணன், பழனிவேல்,சிவக்குமார், ஆகியோர் கலந்து கொண்டனர்.

திறப்பு விழாவில் நடிகை சிம்ரன்,அஜய் ரத்தினம், விஜய் டிவி புகழ், KPY பாலா, உள்ளிட்ட பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

இந்த புதிய ஷோரூம் குறித்து நிர்வாகத்தினர் கூறியதாவது,எங்களது ஷோரூம் இல் சொகுசு கார்கள் விற்பனை மற்றும் சர்வீஸ் சிறந்த முறையில் செய்து தரப்படுகிறோம் குறிப்பாக தென்னிந்தியாவில் நம்பர் ஒன் ஷோரூம் எங்களது ஷோரூம் என்று கூறினர். நிர்வாக இயக்குனர் ராஜ்குமார் நன்றி தெரிவித்தார்..

## தருமபுரி மேற்கு நகர தவெக சார்பில்

# தமிழக முதல்வர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு இரத்ததானம் மற்றும் மருத்துவ முகாம்



தருமபுரி ஜூன் 29

தருமபுரி தனியார் மண்டபத்தில் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜயின் 52 வது பிறந்தநாளை முன்னிட்டு ரத்ததானம், மற்றும் மருத்துவ முகாம் தருமபு மேற்கு நகர தவெக சார்பில் நகர செயலாளர் சிட்டி சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. கிழக்கு மாவட்ட செயலாளர் விஜயகாந்த் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக தருமபுரி மாவட்ட கழகசெயலாளர் சிவன் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி முகாமினை துவக்கி வைத்தனர்.

இதில் 1,000 கும் மேற்பட்ட இளைஞர்கள், பெண்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு ரத்ததானம் செய்தனர், மேலும் மருத்துவ முகாமில் கலந்து கொண்டு உடல் பரிசோதனை செய்து கொண்டனர். அதனை தொடர்ந்து மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டுதல் முகாம் நடைபெற்றது. இரத்த தானம் செய்தவர்களுக்கு பழங்கள், ப்ரட், ஊட்டச்சத்து சாறு,ஊட்டசத்து பெட்டகங்கள் மற்றும் ரத்ததான வழங்கியதற்கானசான்றிதழ்களும், கேடயங்களையும் வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் இணை செயலாளர் வீரமணி, நகர இணை செயலாளர் கவின், பொருளாளர் பாரூக், துணை செயலாளர்கள் பிரதீப்சாமி, பிரியங்கா, மற்றும் மாநில, மாவட்ட, நகர ஒன்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்

# பெரியார் மணியம்மை அறிவியல் ,தொழில்நுட்ப நிறுவனத்தின் போதைப் பொருள் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம்2026




தஞ்சாவூர். ஜுன்.29

பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத் தின் சார்பில் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோதக் கடத்தலுக்கு எதிரான விழிப்புணர் வை ஏற்படுத்தும் நோக்கில் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி,வல்லம் காவல் துணைக் கண்காணிப்பா ளர் எஸ்.காயதிரி, டி.செந்தில் குமார் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் டி. செந்தில்குமார் , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையர்தஞ்சாவூர், கர்னல் கபில் துலி, தேசிய மாணவர் படை தஞ்சாவூர், (தமிழ்நாடு) விமானப் படை தொழில்நுட்ப பிரிவு, தேசிய மாணவர் படை வின் கமாண்டர் கே.சுபாஷ் , தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் (பொறுப்பு)டாக்டர் அஞ்சுகம் பூபதி, ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்த மாரத்தான் போட்டியில் 21 கி.மீ., 10 கி.மீ., 05 கி.மீ., 02 கி.மீ., என நான்கு பிரிவுகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் என அனைத்து வயதினரும் கலந்துகொண்டனர். மொத்தம் சுமார் 1000 பேர் பங்கேற்றனர். தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலிருந்தும் போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.




# தஞ்சாவூர் கல்லுகுளம் மாநகராட்சி நகர ஆரம்ப சுகாதார நிலையத் தில் போலியோ சொட்டு மருந்து முகாம்

தஞ்சாவூர் ஜூன் 29

தஞ்சாவூர் கல்லு குளம் மாநகராட்சி நகரஆரம்பசுகாதாரநிலையத்தில்போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது

தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் விஜய் சரவணன் போலியோ செட்டு மருந்து முகாமை துவங்கி வைத்தார்

இந்நிகழ்வில் தஞ்சை மாநகராட்சி மேயர் ( பொறுப்பு ) டாக்டர் அஞ்சுகம்_பூபதி மாநகராட்சி ஆணையர்தீபனா_விஸ்வேஸ்வரி ஆகியோர் பங்கேற்றனர்.

# நடமாடும் மேமோகிராம்' வாகனச் சேவை சென்னை காவேரி மருத்துவமனை மற்றும் லயன்ஸ் மாவட்டம் 3241 சி கூட்டு முயற்சி




சென்னை, ஜூன்29

சென்னை காவேரி மருத்துவமனை, லயன்ஸ் கிளப் ஆஃப் சென்னை கே. வி. ஜி அறக்கட்டளை மற்றும் லயன்ஸ் மாவட்டம் 3241சி ஆகியவற்றுடன் இணைந்து, தனது சமூகப் பொறுப்புணர்வு (சி.எஸ்.ஆர் ) திட்டத்தின் கீழ் 'நடமாடும் மேமோகிராம்' வாகனச் சேவையைத் தொடங்கியுள்ளது. மார்பகப் புற்றுநோயைக் கண்டறிவதற்கான வழக்கமான மேமோகிராம் பரிசோதனைகளைச் செய்ய, மருத்துவமனைஅல்லது பரிசோதனை மையங்களுக்குச் செல்வதில் சிரமப்படும் பெண்களுக்கு இப்பரிசோதனையை எளிதாக்கு வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

நவீன மேமோகிராம் சாதனம் பொருத்தப்பட்ட இந்த நடமாடும் மருத்துவ ஊர்தியை,தமிழ்நாடு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப. வெங்கடரமணன் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இது குறித்து புற்றுநோய் மற்றும் ரோபோடிக் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் சுஜய் சுசிகர், “மாநில புற்றுநோய் பதிவேட்டின் தரவுகள், பெண்களிடையே மார்பகப்புற்றுநோயே முதன்மையான பாதிப்பாக இருப்பதைக் காட்டுகின்றன. புற்றுநோய் சிகிச்சையில் ஏற்பட்டுள்ளநவீனமருத்துவமுன்னேற்றங்கள் காரணமாக, மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் முறையான சிகிச்சை மூலம் முழுமையாகக் குணப்படுத்த முடியும். ஆனால், பரிசோதனை வசதிகளை எளிதில் அணுக இயலாததாலும், விழிப்புணர்வின்மையா லும் பல பெண்கள் பரிசோதனையைத் தள்ளிப்போடுகின்றனர். இந்த நடமாடும் மேமோகிராம் வாகனம் மூலம், பரிசோதனை வசதியை அவர்களின் வாழ்விடங்களுக்கே கொண்டு சென்று, பாதிப்புகளை முன்கூட்டியே கண்டறிந்து, சரியான நேரத்தில் சிகிச்சை பெற்று நலம் பெற உதவுகிறோம்” என்றார்.

காவேரி மருத்துவமனையின் இணை நிறுவனர் மற்றும் செயல் இயக்குனர் டாக்டர் அரவிந்தன் செல்வராஜ் பேசுகையில், “இந்தத் திட்டம், அனைவருக்கும் எளிதாக கிடைக்கக்கூடிய ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதில் காவேரி மருத்துவமனைக்கு உள்ள அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. இந்த நடமாடும் மேமோகிராம் வாகனம் என்பது வெறும் பரிசோதனை சேவை மட்டுமல்ல, இது பெண்கள் எதிர்கொள்ளும் தடைகளைகுறைத்து,விழிப்புணர்வை ஏற்படுத்தி,தங்களின்ஆரோக்கியத்தை அவர்களே கவனித்துக் கொள்ள வழிவகுக்கும் ஒரு முக்கிய முன்னேற்ற நடவடிக்கையாகும் என்று தெரிவித்தார்

# மயிலாடி பேரூராட்சியில் போலியோ சொட்டு மருந்து




தென் தாமரை குளம், ஜூன் 29,

தமிழகம் முழுவதும் நேற்று போலியோ சொட்டு மருந்து முகாம்; முதல்அமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார் அதன்படி கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடி பேரூராட்சியில் போலியோ சொட்டு மருந்து நேற்று காலை அங்கன்வாடியில் வைத்து மயிலாடி பேரூராட்சி துணைத் தலைவர் பாபு தலைமையில் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்பட்டது பேரூராட்சி தலைவர் விஜயலட்சுமி பாபு மற்றும்பொதுமக்கள்கலந்துகொண்டனர்.



கிருஷ்ணகிரி நகராட்சி, புதிய பேருந்து நிலையத்தில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பாக, 5 வயதுக்குட்டபட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமை கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர்.பா.முகுந்தன் அவர்கள், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் .என்.ஷாஜகான் ஆகியோர் துவக்கி வைத்து, குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கினார்கள். உடன் வட்டார மருத்துவ அலுவலர் .இனியள் மண்டோதரி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



## சூரன்குட்டை கிராமத்தில் எழுந்தருளியுள்ள

# ஸ்ரீ ராதாருக்குமணி சமேத கிருஷ்ணன் திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேக நிறைவு விழாவினையொட்டி சிறப்பு பூஜை

கிருஷ்ணகிரி, ஜூன் 29

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே உள்ள சூரண்குட்டை கிராமத்தில் புதியதாக அமைந்துள்ள ஸ்ரீ ராதாருக்குமணி சமேத கிருஷ்ணன் மற்றும் ஏனைய பரிவரதெய்வங்களின்பிரதிஷ்டைகள் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் கடந்த மாதம் நடைபெற்று முடிந்தது,

இதனைத் தொடர்ந்து திருக்கோவில் பல்வேறு சிறப்பு பூஜைகளுடன் 48 நாள்கள் தொடர்ந்து மண்டலப் பூஜைகள் நடைபெற்று வந்தது, மண்டல பூஜை நிறைவு நாளினை முன்னிட்டு ஸ்ரீ ராதா ருக்குமணி சமேத கிருஷ்ணன் மற்றும் ஏனைய தெய்வங்களுக்கு அபிசேகப் பூகைகள் நடைபெற்றது.

பின்னர் திருக்கோவில் முன்பாக அமைந்துள்ள கல்தூனில் பரணி தீபம் ஏற்றிவைக்கப்பட்டுஸ்ரீராதாருக்குமணி சமேத கிருஷ்ணனுக்கு மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டது. தொடர்ந்து அலங்கார கற்பூரத்தீபாதரைனைகளும் காண்பிக்கப்பட்டது,

தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்த ஸ்ரீ ராதாருக்குமணி சமேத கிருஷ்ணன் மற்றும் ஏனைய தெய்வங்களுகளை ஏராளமான மக்கள் கலந்துக் கொண்டு வழிப்பட்டனர். மண்டல பூஜையின் நிறைவு நாளினை முன்னிட்டு அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது. மேலும் இந்த விழாவிற்கான ஏறிப்புகளை சூரன் குட்டை கிராமத்தை சேர்ந்த ஊர்கவுண்டர்களான பி.சி. சேகர், பையம்மாள், சீனிவாசன், திம்மராயன், பெருமாள், இராம மூர்த்தி, நாகராஜ், அனுமந்த் , சீனன் உள்ளிட்ட சூரன் குட்டை கிராம மக்கள் ஒன்றுனைத்து சிறப்பாக செய்து இருந்தனர்.

# பெண்ணுக்கு வரதட்சணை கொடுமை கணவர், மாமியார் மீது வழக்கு

களியக்காவிளை, ஜூன். 29

களியக்காவிளை அருகேயுள்ள குழிவிளை, பரம்புக்கோடு பகுதியைச் சேர்ந்தவர் பாலையன் மகன் சோபன் (38). கம்பியூட்டர் விற்பனையாளர். இவரும் அதே பகுதியைச் சேர்ந்த ஆசீர்வாதம் (31) என்பவரும் காதலித்து கடந்த 2019 ஜூலை மாதம் திருமணம் செய்து கொண்டனர். இத் தம்பதிக்கு 3 குழந்தைகள் உள்ளனர். திருமணத்துக்கு பின் சோபன் அவரது தாயார் சாரதா (60) ஆகியோர் சேர்ந்து அப்பெண்ணை கூடுதல் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தி வந்தனராம். இதுகுறித்து அவர் களியக்காவிளை காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் சோபன், அவரது தாயார் சாரதா ஆகியோர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

## புதுக்கடை அருகே

# வீட்டில் அழுகிய நிலையில் கிடந்த மூதாட்டி; போலீஸ் விசாரணை

புதுக்கடை, ஜூன். 29

புதுக்கடை அருகே வெள்ளையம்பலம் என்ற பகுதியை சேர்ந்தவர் ராஜன் (57). இவர் தற்போது கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் இந்துஸ்தான் லேட்டக்ஸ் ஒப்பந்த பணியாளராக உள்ளார். இவரது தாயார் சரஸ்வதி (78). இவர் வெள்ளையம்பலத்தில் உள்ள வீட்டில் தனியாக வசித்து வந்தார். ராஜன் அடிக்கடி தாயாரை செல்போனில் தொடர்பு கொண்டு பேசுவது வழக்கமாம். இந்த நிலையில் நேற்று முன்தினம் தாயாரை தொடர்பு கொண்ட போது அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை.

இதை எடுத்து நேற்று மதியம் வீட்டில் வந்து பார்த்துள்ளார். அப்போது வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசி உள்ளது. உடனடியாக கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது, வீட்டு சமையலறையில் சரஸ்வதி உடல் அழுகிய நிலையில் இறந்து கிடந்தார். இது குறித்து உடனடியாக புதுக்கடை போலீசருக்கு தெரிவிக்க தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் உடலை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து போலீசார் மேலும் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## களியக்காவிளையில்

# சாலையோரம் மயங்கிய கிடந்த தொழிலாளி உயிரிழப்பு

களியக்காவிளை, ஜூன்.29

களியக்காவிளை அருகே வன்னியூர், தெங்குவிளாகம் வீட்டைச் சேர்ந்தவர் ஜெபராஜ் (50). தொழிலாளி. இவருக்கு கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட விபத்தில் காலில் ஏற்பட்ட காயம் ஆறாமல் இருந்து வந்துள்ளது. மேலும் அதிகளவு மது அருந்தும் பழக்கமும் இருந்து வந்ததாம். இதையடுத்து அவரது மனைவி ஆன்றனி செலினா கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் பிரிந்து சென்றாராம். அதன் பின்னர் ஜெபராஜ் தனியாக வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் களியக்காவிளை சந்தை அருகே சாலையோரம் மயங்கிய நிலையில் கிடந்தவரை அப்பகுதியினர் மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. அங்கு சிகிச்சை பலனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். இதுகுறித்து களியக்காவிளை போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டனர்.

## சென்னை

# கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட ரவுடி சுட்டுப்பிடிப்பு



சென்னை, ஜுன் 29

சென்னை வண்டலூரில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட ரவுடியை போலீசார் சுட்டுப்பிடித்துள்ளனர்.

சென்னை வண்டலூர் அருகே கரசங்கால் பகுதியில் பெரிய அளவில் கஞ்சா விற்பனை நடைபெறப்போவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இந்த தகவலின் அடிப்படையில் கரசங்கால் பகுதியில் உள்ள கிரிக்கெட் மைதானத்தில் இன்று காலை சந்தேகத்திற்கு இடமாக நின்றுகொண்டிருந்த 2 நபர்களை போலீசார் நெருங்கி சென்றபோது அவர்கள் கையில் வைத்திருந்த பையுடன் இருவரும் அங்கிருந்து ஓடிச்சென்றார்.

துப்பாக்கி சூடு

இதையடுத்து, இருவரையும் விரட்டி சென்ற போலீசார், ஒருவரை கைது செய்தனர். மற்றொருவரை பிடிக்க முயன்றபோது அவர் போலீசாரை தாக்கியுள்ளார். இதனால் அவரை போலீசார் சுட்டுப்பிடித்தனர். இதனை தொடர்ந்து போலீசார் நடத்திய விசாரணையில் இருவரும் வண்டலூர் ஓட்டேரி பகுதியை சேர்ந்த ரவுடிகளான செல்வகுமார், கனகராஜ் என்பது தெரியவந்தது. மேலும், டவுடிகள் வைத்திருந்த பையில் இருந்த 22 கிலோ கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். இதையடுத்து, துப்பாக்கி சூட்டில் காயமடைந்த ரவுடி செல்வகுமாரை போலீசார் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். மேலும், ரவுடிகளுக்கு கஞ்சா சப்ளை செய்தது யார்? இவர்கள் யாருக்கு விற்பனை செய்ய முற்பட்டனர்? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.